பாஜ தான் எங்களின் முதல் எதிரி... முதல் பக்க தொடர்ச்சி

சீரியசுடன் கொஞ்சம் சிரிப்பையும் கையில் எடுத்து போறதுதான் நம்முடைய ஸ்டைல், நம்முடைய ரூட். தாறுமாறாக ஆடுற ஆட்டம் இதுவல்ல. கூச்சல் போட முடியாது அல்ல. கவனமாகத்தன் களமாடனும். அரசியல் என்றாலே கொந்தளித்தால்தான் புரட்சி பண்ண வந்தாங்க என்பது செட் ஆயிடுச்சு.. கொந்தளிப்பது என்பதெல்லாம் நமக்கு வேண்டாம். அது நமக்கும் செட் ஆகாது.

பெரியார் சொன்ன கடவுள் மறுப்பு கொள்கையை மட்டும் நாங்கள் கையில் எடுக்கப் போறதில்லை. எங்களுக்கு அதில் உடன்பாடும் இல்லை. யாருடைய கடவுள் நம்பிக்கைக்கும் நாங்கள் எதிரானவங்க இல்லை. அரசியலில் அண்ணன், தம்பி உறவை அறிமுகப்படுத்தின அறிஞர் அண்ணா சொன்ன மாதிரி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதே எங்களின் நிலைப்பாடும். ஆனாலும் பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றம், சமூக சீர்திருத்தம், சமூக நீதி, பகுத்தறிவு சிந்தனை பெரியார் சொன்ன எல்லாவற்றையும் நாம முன்னெடுக்க போகிறோம். பெரியாருக்கு அப்புறம் எங்கள் கொள்கை தலைவர் பச்சைத்தமிழன் பெருந்தலைவர் காமராஜர். இந்த மண்ணில் மதச் சார்பின்மைக்கும், நேர்மையான நிர்வாக செயல்பாட்டுக்கும் முன்னுதாரமாக இருப்பதால் அவரை எங்கள் வழிகாட்டியாக ஏற்கிறோம். இந்திய துணைக்கண்டத்தின் அரசியல் சாசனத்தை உருவாக்கிக் காட்டியவர் அண்ணல் அம்பேத்கர். இந்தியாவில் இந்த பெயரை கேட்டாலே.... சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திறவங்க எல்லாம் நடுங்கி போயிடுவாங்க... வகுப்புவாதி பிரதிநிதித்துவத்தையும், சாதிய ஒடுக்குமுறையையும் நிலைநிறுத்த போராடிய மாபெரும் தலைவர். பெண்களை கொள்கை தலைவராக ஏற்று களத்தில் வரும் முதல் அரசியல் கட்சி தவெகதான். அப்படி இரு பெண்களில் ஒருவர் வேலு நாச்சியார், மற்றொருவர் அஞ்சலை அம்மாள். இவர்கள்தான் நம் கொள்கை தலைவர்கள். சொத்தை இழந்தாலும் இந்த மண்ணுக்காக போராடியவர்தான் அஞ்சலை அம்மாள். இவர்களை உறுதியாக நாம் பின்பற்றுவதுதான் மதச்சார்பின்மைக்கும், சமுதாய நல்லிணக்கத்துக்கும் நமக்கு நல்ல சான்றாக இருக்கும்.

நமக்கெதுக்கு அரசியல் என்றுதான் ஆரம்பத்தில் நானும் நினைத்தேன். ஆனால், நாம் மட்டும் நல்லா இருக்கணும் நினைப்பது சுயநலமில்லையா?. நம்மள வாழ வைத்த மக்களுக்கு எதையும் செய்யாமல் இருந்தால் நல்ல இருக்குமா, ஒரு லெவலுக்கு மேலே காசு சேர்த்து நாம என்ன பண்ணப் போறோம். நமக்கு இந்த வாழ்க்கையை கொடுத்த இந்த மக்களுக்கு நாம என்ன செய்யப்போகிறோம். இப்படி எல்லாம் ஏகப்பட்ட கேள்விகளும் மனதில் வந்துகிட்டே இருந்தது. இப்படி எல்லா கேள்விக்கும் விடைதேடி யோசித்த போது ஒட்டுமொத்தமாக கிடைத்த விடைதான் அரசியல். அதான் இறங்கியாச்சு. இனி எதைப்பற்றியும் யோசிக்கக் கூடாது. அரசியல்ல நம்ம என்ன ஸ்டாண்ட் எடுக்கப்போகிறோம் என்பதுதான் ரொம்ப இம்பார்ட்டெண்ட். அதுதான் நமது எதிரிகள் யாருன்னு சொல்லும். அப்படி ஒரு கரெக்டான ஸ்டாண்ட் எடுத்திட்டாலே நம்முடைய எதிரிகள் நமக்கு முன்பு வந்து அவர்களே நம் முன்னாடி வந்து நம்மை எதிர்க்க ஆரம்பிப்பாங்க. எதிரிகள் இல்லாத வெற்றி வேண்டுமானால் இருக்கும். ஆனால், களம் இருக்க முடியாதே. அதில் நமது வெற்றியை தீர்மானிப்பது நம்முடைய எதிரிகள்தானே.

நாம கட்சியை அறிமுகப்படுத்தியபோதே அதாவது பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என திருக்குறளை நம்முடைய அடிப்படை கோட்பாடாக, கொள்கையாக அறிவித்தபோதே நம்முடைய உண்மையான எதிரி யார்? என்பதை டிக்ளேர் பண்ணிட்டோம். பிறப்பை வைத்து ஏற்றத்தாழ்வு இல்லை, அது கூடவே கூடாது என சமதர்ம சமத்துவ கொள்கையை கையில் எடுத்த அப்பவே இங்கு கொஞ்சம் கதறல் சத்தம் கேட்க ஆரம்பித்தது. இந்த மாநாட்டில் இப்போ ஒப்பனா அறிவித்ததுக்கு அப்புறம் இந்த கதறல் இன்னும் சத்தமாக கேட்கும் என நினைக்கிறேன்.. பார்ப்போம்...

எங்களுடைய தவெகவுக்கு நாங்கள் டிசைடு பண்ணி இருக்குற கலர தவிர வேறு எந்த கலரையும் யாரும் அடிக்க முடியாது. எங்க கோட்பாடே பிறப்பால் அனைவரும் சமம் என்பது. இது யாருக்கு நேர் எதிரான கோட்பாடுனு நான் சொல்லியா உங்களுக்கு தெரியணும். எனவே, இந்த நாட்டையே பாழ்படுத்துற பிளவுவாத அரசியலை செய்யுறவங்கதான் (பாஜ) தவெகவின் முழு முதல் கொள்கை எதிரி. நமக்கு இன்னொரு கோட்பாடும் இருக்கிறதே. ஊழல் மலிந்த கலாசாரத்தை எதிர்க்கிறதானே அது. ஊழல் இருக்கே வைரஸ் மாதிரி பரவிக்கிடக்கு. அதை ஒழித்தாக வேண்டும். பிளவுவாத சக்திகளை கூட நாம் எளிதில் கண்டுபிடித்து விடலாம். நம்முடைய ஒரு எதிரி பிளவுவாத சக்தி, இன்னொரு எதிரி கரப்சன். என் சினிமா உச்சத்தை உதறிவிட்டு, உங்கள் விஜய்யாக வந்துள்ளேன். நாகரிகமான அரசியல் செய்யவே வந்துள்ளோம். எங்களின் அரசியல் ஆழமாக இருக்கும். 2026ம் ஆண்டு தேர்தலில் ஒற்றை விரலில் டிவிகே என்ற அரசியல் கட்சியின் சின்னத்துக்காக அழுத்தும் ஒவ்வொரு வாக்குகள் ஒரு பட்டனில் இருந்து அணுகுண்டாக விழும். நடக்கும் பாருங்க...

இவ்வாறு அவர் பேசினார்.

▶ மாநாட்டில் பங்கேற்ற தொண்டர்கள் கூட்டம்.

‘விசிலடிச்சான் குஞ்சு என்று யாரும் சொல்லிவிடக் கூடாது’

விஜய் பேசுகையில், ‘நம்மை பார்த்து விசிலடிச்சான் குஞ்சு என்று யாரும் சொல்லிவிடக் கூடாது. நமது கொள்கை, கோட்பாடுகளையும், தலைவர்களையும் மனதில் நிறுத்தி மற்றவங்க பார்த்து சொல்லாமல் வேகமானவர்கள், ஆனா விவேகமானவர்கள் என சொல்ல வைக்கணும். எல்லோரும் அப்படி சொல்கிறமாறி செயல்படணும். சொல் அல்ல முக்கியம். செயல், செயல், செயல்தான் முக்கியம். அரசியல் போரில் நாம் நம் கொள்கைகளை செய்து முடிப்போம், அதுவரை நெருப்பாக இருப்போம். அதற்காக நாம் வெறுப்பு அரசியலை கையில் எடுக்கப் போவதில்லை. அதுவரை நெருப்பாகவே இருப்போம். என்ன நண்பா, என்ன தம்பி, சாரி... என்ன தோழா, என்ன தோழி’ என்றார்.

தண்ணி இல்ல... சாப்பாடு இல்ல..

விஜய் கட்சி மாநாட்டுக்கு லட்சத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள், ரசிகர்கள் வந்தனர். ஆனால் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரப்படவில்லை. குடிநீர், உணவு போன்ற வசதிகள் இல்லை. மாநாடு திறந்த வெளியில் நடந்ததால், கொளுத்தும் வெயிலில் இருந்து தப்பிக்க நிழலுக்கு கூட ஒதுங்க இடமில்லை. இதனால் 120க்கும் மேற்பட்டோர் மயங்கி விழுந்தனர். மருத்துவ வசதிகள் முறையாக செய்யாததால் சிகிச்சை கொடுப்பதில் சிக்கல் ஏற்பட்டது. மாநாட்டு திடலில் ஆம்புலன்ஸ்கள் மிக குறைந்த அளவிலேயே நிறுத்தப்பட்டிருந்ததால் மயங்கியவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியவில்லை. மாநாட்டில் விஜய் பேசும்போது, ‘மக்கள் அனைவருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் செயல்படுவேன்’ என்றார். ஆனால் மாநாட்டுக்கு வந்த எங்களுக்கு தண்ணி, சாப்பாடு கூட கிடைக்கல. இதை சரியா செய்து தந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என தொண்டர்கள் தெரிவித்தனர்.

இரங்கல் தெரிவிக்கவில்லை

மாநாட்டில் பங்கேற்க வந்து விபத்தில் சிக்கி 4 பேர் இறந்தனர். இந்த தகவல் விஜய்யின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. மாநாட்டில் உரையாற்றும்போது இறந்தவர்களுக்கு விஜய் இரங்கல் தெரிவிப்பார் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் தெரிவிக்கவில்லை. கட்சி தொடங்கி முதல் மாநாட்டில் பலி என்றால் சரியாக இருக்காது என்று எண்ணி விஜய் தவிர்த்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. பேச்சின் முடிவில், ‘அனைவரும் பாதுகாப்பாக வீடு போய் சேருங்கள்’ என்று கூட சொல்லவில்லை என சில ரசிகர்கள் ஆதங்கப்பட்டனர்.

தவெக – நாதக கூட்டணியா?

இப்போதுதான் கருத்தரித்து இருக்காரு... குழந்தைக்கு வெயிட் பண்ணுங்க...

சீமான் பரபரப்பு பேட்டி

மதுரை, அக். 28: சுதந்திர போராட்ட வீரர்களான மருதுபாண்டியர்களின் 223வது குருபூஜையையொட்டி மதுரை, தெப்பக்குளத்தில் உள்ள அவர்களின் சிலைக்கு, நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் மாலை அணிவித்து நேற்று மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: அரசியல் என்பது கட் அவுட் சார்ந்தது அல்ல. கருத்தியல் சார்ந்தது. வேலு நாச்சியாரை, அம்பேத்கரை வைப்பது பிரச்னை இல்லை. வேலு நாச்சியார் யார் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். சிவப்பு மஞ்சள் நிறத்தில் எங்கள் கொடியை எடுத்தோம், அதையே விஜய்யும் வைத்திருக்கிறார். நாங்கள் புலி வைத்திருக்கிறோம், அவர் யானையை வைத்திருக்கிறார். இதுவரை வந்த கட்சிகளுக்கு திராவிட அடையாளமாக கருப்பு சிவப்பு இருந்தது. இப்போது, சிவப்பு மஞ்சளாக மாறியிருக்கிறது.

விஜய் கட்சியின் மாநாட்டுக்கு வரும் கூட்டம் வாக்குகளாக மாறுமா எனக் கேட்கிறீர்கள். அவர் இப்போதுதான் கருத்தரித்து இருக்கிறார். பெண் பிள்ளைதான் பிறக்கும்; ஆண் பிள்ளைதான் பிறக்கும் என இப்போதே சொல்வது போல் இருக்கிறது. பிறப்பொக்கும் என நான் முதலில் கொண்டு வந்ததை, விஜய்யும் எடுத்து செய்வது மகிழ்ச்சி. நான் பேசவில்லை என்றால் சுந்தரலிங்கனாரும், வேலு நாச்சியாரும் இந்த தலைமுறைக்கு தெரிந்திருக்குமா? அதுதான் முக்கியம்.

நாங்கள் அரசியலுக்கு வரும்போது இவ்வளவு ஆதரவு இல்லை. திரைப் புகழ் இருக்கும்போது வீச்சும், ரீச்சும் அதிகம். ஆனால் எங்களுக்கெல்லாம் அப்படி இல்லை. கடைசி வரைக்கும் தமிழர்கள் நாங்கள் அனாதையாக இருக்க வேண்டியிருக்கிறது. விஜய் கட்சியின் மாநாடு ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என நினைக்கிறேன். நாம் தமிழர் மற்றும் தவெகவின் கூட்டணி, கொள்கை கூட்டணியாக அமையுமா என்பது குறித்து, விஜய் தான் முடிவெடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

மதுரையில் மழை வெள்ள பாதிப்புகளை பார்வையிட்ட பின் சீமான் அளித்த பேட்டியில், தவெக தலைவர் விஜய்யின் கொள்கை எங்கள் கொள்கைக்கு நேர் எதிரானது. அவரது கொள்கைளும் எங்கள் கொள்கைகளும் ஒத்துப் போகவில்லை. திராவிடமும், தமிழ் தேசியமும் வேறு வேறானது. நான் ஏற்கனவே தனித்து போட்டி என்று அறிவித்துவிட்டேன். யாருடனும் கூட்டணி இல்லை என்று தெரிவித்தார்.

பாஜ மாநில நிர்வாகி திடீர் ராஜினாமா

திருச்சி, அக். 28: தமிழக பாஜ சிறுபான்மை அணி மாநில துணைத்தலைவர் திடீரென ராஜினாமா செய்துள்ளார். ராஜினமா கடிதத்தை மாநில தலைவருக்கு அனுப்பியுள்ளார்.

திருச்சி தென்னூரை சேர்ந்தவர் ஏ.ஆர்.பாஷா. தமிழக பாஜ சிறுபான்மை அணி மாநில துணைத்தலைவர். சமூக ஊடகங்கள், செய்தி தொலைக்காட்சிகளில் நடக்கும் விவாதங்களில் கலந்து கொள்வார். இந்த நிலையில் ஏ.ஆர். பாஷா, தனது பதவியை திடீரென ராஜினாமா செய்துள்ளார். கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்தில் இருந்தும் தன்னை விடுவித்து கொள்வதாக மாநில தலைவர் அண்ணாமலை, திருச்சி மாநகர் மாவட்ட தலைவர் ராஜசேகர் ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பியுள்ளார்.

தெற்கு இரயில்வே

முதுநிலை கோட்ட வர்த்தக மேலாளர், தெற்கு ரயில்வே, சென்னைகோட்டம், சென்னை – 600 003 அவர்கள், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும், ராயபுரம் (RPM), நந்தியம்பாக்கம் (NPKM), வ. உ. சி. நகர் (VOC) மற்றும் ஏகாட்டூர் (EGT நிறுத்த நிலையங்களில் நிறுத்த முகவர் – (ஹால்ட் ஏஜன்ட்) நியமனம் செய்வதற்காக விண்ணப்பங்களை வரவேற்கிறார்

விண்ணப்பத்துக்குரிய பார்வை எண்.	M/C. 210/Halt/2024
பணி பற்றிய விவரம்	ராயபுரம் (RPM) ரயில் நிலையத்தில் நிறுத்த முகவர் (ஹால்ட் ஏஜன்ட்) நியமனம் செய்வதற்கான விண்ணப்பம் வரவேற்றல்
	நந்தியம்பாக்கம் (NPKM) ரயில் நிலையத்தில் நிறுத்த முகவர் (ஹால்ட் ஏஜன்ட்) நியமனம் செய்வதற்காக விண்ணப்பம் வரவேற்றல்
	வ. உ. சி நகர் (VOC) ரயில் நிலையத்தில் நிறுத்த முகவர் (ஹால்ட் ஏஜன்ட்) நியமனம் செய்வதற்காக விண்ணப்பம் வரவேற்றல்
	ஏகாட்டூர் (EGT) ரயில் நிலையத்தில் நிறுத்த முகவர் (ஹால்ட் ஏஜன்ட்) நியமனம் செய்வதற்காக விண்ணப்பம் வரவேற்றல்
அமைவிடம்	சென்னை கடற்கரை – வண்ணாரப்பேட்டை ரயில் நிலையங்கள் இடையே
	அத்திப்பட்டு – மீஞ்சூர் ரயில் நிலையங்கள் இடையே
	தண்டையார்பேட்டை – திருவொற்றியூர் ரயில் நிலையங்கள் இடையே
	திருவள்ளூர் – கடம்பத்தூர் ரயில் நிலையங்கள் இடையே
காலம்	5 ஆண்டுகள்

விண்ணப்ப படிவத்தை வாங்கிக் கொள்ள வேண்டிய அலுவலகத்தின் முகவரி கோட்ட ரயில்வே மேலாளர் / வர்த்தகம், 4வது தளம், மேற்கு பிரிவு, மூர் மார்க்கெட் வளாகம், சென்னை 600 003

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேதியும் நேரமும் : 25–11–2024 (திங்கள்கிழமை) அன்று 10.00 மணி முதல் 14.00 மணி வரை

விண்ணப்ப படிவம் திறக்கப்படுதல் : 25–11–2024 (திங்கள்கிழமை) அன்று 14.30 மணி

விரிவான தகவல்கள் காணக்கூடிய இணையதள முகவரி : www.sr.indianrailways.gov.in

விண்ணப்பங்கள் பெறப்படும் தேதியும் விண்ணப்பம் திறக்கப்படும் தேதியும் பின்னர் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அவை அதற்கடுத்த வேலை நாளில் நடைபெறும்.

கோட்ட ரயில்வே மேலாளர் / வர்த்தகம்,
தெற்கு இரயில்வே, சென்னை – 600 003

கோரிக்கை அறிவிப்பு

எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்

CIN: U67100MH2007PLC174759

ரீடெயில் சென்ட்ரல் & பதிவு அலுவலகம்: எடெல்வீஸ் ஹவுஸ், சிஎஸ்டி சாலை, கலீனா, மும்பை 400098

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சட்டம்") இன் பிரிவு 13(2)

கீழே கையொப்பமிட்டவர் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடின் ("இஏஆர்சி") அதிகாரப்பூர்வ அதிகாரி ஆவார். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, அதிகாரப்பூர்வ அதிகாரி சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி இருக்கிறார். பின்வரும் கடன்தாரர்(கள்) அவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்ட இங்கே கீழேயும் கொடுக்கப்பட்டதான தொகைகளை திருப்பிச் செலுத்துமாறு கோரியிருக்கிறார். மேற்கூறியது தொடர்பாக, கடன்தாரர்கள் இந்த அறிவிப்பு வெளியானதிலிருந்து 60 நாட்களுக்குள், எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெடுக்கு இங்கே கீழே குறிப்பிட்ட தொகைகளை, மேற்கூறிய கடன்தாரர்(கள்) மூலம் நிறைவேற்றப்பட்ட பிற ஆவணங்கள்/பத்திரங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கடன் ஒப்பந்தம் கீழ் செலுத்தப்பட வேண்டிய, கீழே குறிப்பிட்ட தேதி(கள்) முதல் பணம்செலுத்தப்பட்டமாற்றம் மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை, மேற்கூறிய கோரிக்கை அறிவிப்பில் விவரிக்கப்பட்டவாறான மேற்கொண்டு வட்டியுடன் சேர்த்துச் செலுத்துமாறு இதன்மூலம் மீண்டும் ஒருமுறை அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கடனாக, பின்வரும் சொத்து முறையே மேற்கூறிய கடன்தாரர்(கள்) மூலம் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப-கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	பொறுப்பாசிரி & உரிமைமிந்தோர் விவரங்கள்
1	1. திரு கங்காதரம் M P (கடன்தாரர்), 2. மஞ்சுளா G (உப-கடன்தாரர்), 2. திரு கார்த்திகேயன் G (உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண் : TBM13010100127	3rd September 2024 & Rs. 10,89,374.94 /-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 493 & சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
	சொத்து விவரம்: சொத்து 960 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ளது. திருவொற்றியூர் கிராமம் திருவொற்றியூர் நகராட்சி அம்பத்தூர் தாலுக்கா திருவள்ளூர் மாவட்டம், கிராமத் தெருவில் அமைந்துள்ள கட்டிடத்துடன் அடி (89.19 சதுர மீட்டர்) நிலம். சொத்து வரி மதிப்பீடு எண். 12 கிராமத் தெரு தேரடி திருவொற்றியூர் சென்னை – 600019 சர்வே எண். 237/37 இல் அடங்கியுள்ளது. டவுன் சர்வே புலப் பதிவேட்டில் இருந்து எடுக்கப்பட்ட பகுதி எண். 11805 பழைய சர்வே எண். 237/1 டவுன் சர்வே எண். 3 4/4 5/4 வார்டு எண். 4/11 மற்றும் கீழ் எல்லை: வடக்கு: கிராமத் தெரு, தெற்கு: சொத்து திரு. எம்.பி.க்கு சொந்தமானது. மோகன்ராஜ், கிழக்கு மூலம்: சொத்து திரு. சுந்தரமூர்த்தி கிராமணிக்கு சொந்தமானது, மேற்கு மூலம்: சொத்து திரு. எம்.பி. முனிவேல். வடக்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக அளவிடுதல்: 25 அடி; தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்கு : 23 அடி; கீழ் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கு: 40 அடி; மேல்புறம் வடக்கிலிருந்து தெற்கே: 40 அடி.		
19	1. M/s S.M. டிரேடர்ஸ் (கடன்தாரர்), 2. திரு. D. சுரேஷ் (உப-கடன்தாரர்), 3. Ms S.மகேஷ்வரி (உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண் : 2992907	4th September 2024 & Rs.80,74,907.69/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 482 & HDB பைனான்ஸ் சர்வீஸ் லிமிடெட்
	சொத்து விவரம்: 725 சதுர அடியில் தரைத்தளத்தில் உள்ள அனைத்து பிளாட் நம்பர் ஜி–1. அடி, பிளாட் எண்.21, லால் பகதூர் சாஸ்திரி காலனி, (சாஸ்திரி நகர்) கோயம்பேடு, சென்னை–600107 இல் 428 சதுர அடியில் கட்டப்பட்டது. அடி. 2372 சதுர அடியில் நிலத்தின் பிரிக்கப்படாத பங்கு, பைமாஷ் எண்கள். 1011 மற்றும் 1012, கிராம நத்தம் சர்வே எண். 121, டி.எஸ்.எண்.23, கோயம்பேடு கிராமத்தின் பிளாக் எண்.39 ஆகியவற்றை உள்ளடக்கியது மற்றும் வடக்கு எல்லையில் உள்ளது – சொத்து திருமதி சுசீலா, தெற்கு – 20 அடி அகல சாலை, கிழக்குக்கு சொந்தமானது. – ஜெயராம் தெரு (இப்போது சாஸ்திரி தெரு), மேற்கு – கரை தெரு (இப்போது சாஸ்திரி தெரு). அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில்: 62 அடி, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி: 31 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கே: 51 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கே: 62 அடி.		
21	1. திரு சரவணகுமார் S. (கடன்தாரர்), 2. திருமதி. பவானி S(உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண் : 6019030	4th September 2024 & Rs.22,91,575.65/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 482 & HDB பைனான்ஸ் சர்வீஸ் லிமிடெட்
	சொத்து விவரம்: சடையங்குப்பம் கிராமத்தின் சர்வே எண்.9ல் அமைந்துள்ள அனைத்து நிலத்தின் துண்டு மற்றும் பார்சல், பிளாட் எண். 2/113 என குறிக்கப்பட்டுள்ளது, மணாலி கட்டம் – II திட்டத்தில் EWS ‘A’ வகை மற்றும் நீல மைதானம் 0432 அளவிடும் . அடி மற்றும் அதைச் சுற்றி வரம்புகள் பின்வருமாறு: வடக்கு: பிளாட் எண்.104, தெற்கே: 24 அடி அகல சாலை, கிழக்கு: பிளாட் எண். 114, மேற்கு: பிளாட் எண். 112 வடக்கில் அளவிடும் 12 அடி 0 அங்குலம் கிழக்கில் 36 அடி 0 அங்குலம், தெற்கில் 12 அடி 0 அங்குலம், மற்றும் மேற்கில் 36 அடி 0 அங்குலம், அளக்கும் நிலம் மற்றும் 0432 சதுர அடி.		
28	1. திரு ஜெயகுமார் P. (கடன்தாரர்), 2. திருமதி. காஞ்சனா J. (உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண் : 1185386	4th September 2024 & Rs.5,34,917.51/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 482 & HDB பைனான்ஸ் சர்வீஸ் லிமிடெட்
	சொத்து விவரம்: கதவு எண்.10A, பிளாட் எண்.145 மற்றும் 147, சண்முகபுரம் 4வது தெரு, திருவொற்றியூர், சென்னை–600 019, 1807 இல் இருந்து சுமார் 850 சதுரடி பரப்பளவைக் கொண்ட கட்டிடத்துடன் கூடிய நிலத்தின் அனைத்து பகுதியும் மற்றும் பார்சல். சதுர அடி, வடக்குப் பகுதியில், சர்வே எண்.546, 548, டவுன் சர்வே எண்.65/2, 662, பிளாக் எண்.4, வார்டு “ஜி”, திருவொற்றியூர் டவுன் சர்வே புலப் பதிவேடு ஆர்.பி.டி.எண்.1286/2010 இல் அடங்கியுள்ளது. அரசு ஒப்புதல் லேஅவுட் எண்.டி.பி.எண்.233/68 இல், எண்.27, திருவொற்றியூர் கிராமம், திருவொற்றியூர் மண்டலம்–1, சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு 600019, வடக்கு சண்முகபுரம் 4வது தெருவில் அமைந்துள்ளது. பி.செல்வன் என்பவருக்குச் சொந்தமான கிழக்குப் பக்கச் சொத்தில் ப்ளாட் எண்.146, 147ஐக் கொண்ட எஞ்சிய நிலத்துடன் தெற்கே, எஞ்சிய நிலத்துடன் கிழக்கே கதவு எண்.10, சண்முகம் என்பவருக்குச் சொந்தமான கதவு எண். கிழக்கில் வடக்கிலிருந்து தெற்கே 25–3/4 அடி, வடக்கிலிருந்து தெற்கே மேற்கில் 24–1/4 அடி, கிழக்கிலிருந்து மேற்காக வடக்கில் 36–1/2 அடி, தெற்கில் கிழக்கிலிருந்து மேற்காக 32–1/ 2 அடி. 850 சதுர அடி நிலம், கதவு எண்.10A உடைய கட்டிடத்துடன் கூடிய நிலம், மின் இணைப்பு, பாதுகாப்பு வைப்பு மற்றும் பிறவற்றுடன், சர்வே எண்.548/2B பகுதியில் உள்ள பட்டாவின்படி மேற்கூறிய சொத்து மற்றும் துணைப் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது. திருவொற்றியூர் மற்றும் சென்னை வடக்கு பதிவு மாவட்டம். மின்சார இணைப்பு எண்.016–031–402, சொத்து வரி எண்.01–006–03449–000–TVT–37432.		
32	1. M/s காந்திமதி டிபார்ட்மென்ட்ஸ் ஸ்டோர் (கடன்தாரர்), 2. திரு. சதீஷ் பாபு C (உப-கடன்தாரர்), 3. திருமதி காந்திமதி (உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண் : 5365288 & 13327208	5th September 2024 & Rs.28,90,598.75/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 482 & HDB பைனான்ஸ் சர்வீஸ் லிமிடெட்
	சொத்து விவரம்: திருவொற்றியூர் தாலுகா, சடையங்குப்பம் கிராமத்தின் ச.எண்.261 பகுதியிலுள்ள சொத்தின் ப்ளாட் எண். 8, பிளாக் எண்.80, லிக் டைப், மணலி நியூ டவுன், சடையங்குப்பம், சென்னை – 600 103 ஆல் தட் பீஸ் மற்றும் பார்சல், திருவள்ளூர் மாவட்டம் 445 ச.கி. அடி., மற்றும் எல்லையில்; கிழக்கு மூலம்: திரு. சந்திரிகாவின் மீதமுள்ள பகுதி மற்றும் 40 அடி அகல சாலை வடக்கே: பிளாட் எண்.9 பிளாக் எண்.80 மேற்கு மூலம்: பிளாக் எண்.80, பிளாட் எண்.11 தெற்கு மூலம்: பிளாக் எண்.போ, பிளாட் எண்.9, திரு. சந்திரிகாவின் எஞ்சிய பகுதி. அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு மற்றும் தெற்கு – 12 ¾ அடி, வடக்கிலிருந்து தெற்கே கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் – 25 அடி. பாதை அளவீடு: வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்காக– 25 ¼ அடி, கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்கே– 5 அடி.		
37	1. M/s பாலாஜி வெஜிடேபிள் மார்க்கெட (கடன்தாரர்), 2. திரு.D சுந்தர் (உப-கடன்தாரர்), 3. திருமதி J வள்ளி (உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண் : 3918539 & 13978901	5th September 2024 & Rs.20,14,662.64 /-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 482 & HDB பைனான்ஸ் சர்வீஸ் லிமிடெட்
	சொத்து விவரம்: சொத்தின் அனைத்து துண்டு மற்றும் பார்சல் தாங்கி கதவு எண்: 86/12, பாரதியார் தெரு, மாதவரம், சென்னை – 600 060 மாதவரம் கிராமம் மற்றும் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் S.no.951/2a1 இல் 400 ச.கி. அடி, அல்லது 37.17 சதுர. மீட்டர்., மற்றும் எல்லையில்; கிழக்கு மூலம்: சொத்து திரு. ஷீனு வடக்கு மூலம்: சொத்து திரு. அர்ஜுனனுக்கு சொந்தமானது. மேற்கு மூலம்: சொத்து திரு. ராஜாவுக்கு சொந்தமானது தெற்கு மூலம்: 8 அடி அகல பொதுவான பாதை. அளவீடு: வடக்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக – 20 அடி, தெற்குப் பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக – 20 அடி, கிழக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கே – 20 அடி, மேற்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்கே – 20 அடி.		
68	1. திரு T. சந்துரு (கடன்தாரர்), 2. திருமதி. இந்துமதி (உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண் : 6894235 & 14613066	23rd August 2024 & Rs.21,23,862.29/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 483 & HDB பைனான்ஸ் சர்வீஸ் லிமிடெட்
	சொத்து விவரம்: 1200 சதுர அடி நிலத்தின் அனைத்து துண்டு மற்றும் பார்சல். அடி. பேரிங் பிளாட் எண்கள் 5 மற்றும் 6, உதய் நகர் இல்லம் எஸ். எண். 51, கொமுணிவாக்கம் கிராமத்தின் பட்டா எஸ். எண் 51/1a. மற்றும் எல்லையில்; கிழக்கு மூலம்: பிளாட் எண். 7 வடக்கு மூலம்: காலி நிலம் மேற்கு மூலம்: பிளாட் எண். 4 தெற்கு மூலம்: 16 அடி சாலை.		
78	1. திரு செந்தில் R. (கடன்தாரர்), 2. திருமதி. திவ்யா D (உப-கடன்தாரர்), கடன் கணக்கு எண் : TVL14010100226 & TVL14010100240	22nd August 2024 & Rs.17,62,200.97/-	இஏஆர்சி பொறுப்பாட்சி எஸ்சி – 493 & சென்ட்ரம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
	சொத்து விவரம்: 602 ச.கி. அளவுள்ள நிலப்பரப்பின் அனைத்து துண்டு மற்றும் பார்சல். அடி., தெற்குப் பகுதி, 2480 சதுர அடியில். நிலத்தின் அடி மற்றும் கட்டிடத்துடன் சேர்ந்து, பிளாட் எண். 27, பழைய சர்வே எண். 99/12 இல் உள்ளடங்கியது, "நளினி கிருஷ்ணா நகர்" என பெயரிடப்பட்ட லேஅவுட், Dtcp ஒப்புதல் எண். C.p/csr எண். 84/252 மற்றும் L. P. எண். 210 Dt. 02.11.1984, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, திருநீர் கிராமத்தில், காஞ்சிபுரம் மற்றும் துணைப் பதிவு மாவட்டத்தின் பதிவு மாவட்டம் மற்றும் அதன் எல்லைக்குள் அமைந்துள்ளது; கிழக்கு மூலம்: பிளாட் எண். 26, வடக்கு மூலம்: பிளாட் எண். 27 மீதமுள்ள பகுதி, மேற்கு: 24 அடி சாலை, தெற்கு மூலம்: பிளாட் எண். 28		

மேற்கூறிய கடன்தாரர்கள் மேற்கூறியவாறு எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனிக்கு பணம்பட்டுவாடாச் செய்யத் தவறினால், எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி, சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தும் விதிகளின் கீழ், செலவுகள் மற்றும் விளைவுகள் வகையில் மேற்கூறிய கடன்தாரர்(கள்) இன் முழுப் பொறுப்பில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும். கடன்தாரர்கள் எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனியின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிறவழியில், மேற்கூறியச் சொத்துகளை பெயர்மாற்றம் செய்வதற்கு சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டத்தின் விதிமுறைகள் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மீறும் அல்லது மீறத் தூண்டும் நபர், சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டவாறு சிறைதண்டனை மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படுவதற்கு உட்பட்டவர்.

இடம்: சென்னை
நாள்: 28.10.2024

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் கம்பெனி லிமிடெட்டிற்காக

Edelweiss Asset Reconstruction

நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: டவர் 3, ஐந்தாவது தளம், விங் B, கோஹினூர் சிட்டி மால், கோஹினூர் சிட்டி, கிரோல் சாலை, குர்லா (மேற்கு), மும்பை–400 070, பிராந்திய அலுவலக இடம்: எண்.19, 7வது தளம், கோச்சார் டவர்ஸ், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை–600017.

சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக) [விதி- 8(1)]

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 (2002 இன் 54) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13 (12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி **13.09.2022 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கடன்தாரர் ஸ்டீபன்ராஜ் முனுசாமி மற்றும் உப கடன்தாரர் லோகேஸ்வரி ஸ்டீபன்ராஜ் ஆகியோர் அறிவிப்பில் குறிப்பிட்ட திருப்பிச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.19,26,591.29/– (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபத்தாறாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஒன்று மற்றும் பைசா இருபத்து ஒன்பது மட்டும்)** என்ற அறிவிப்பில் குறிப்பிட்டத் தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார், இதன்மூலம் கடன்தாரர் மற்றும் பொதுவாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள் 2002 இன் விதி (8) உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 உட்பிரிவு (4) இன் கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி **இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை தலைமை நீதித்துறை நீதிபதி(திருவள்ளூர்) வழக்கு எண்.17437 of 2024 இல் உள்ள வழக்கிற்காக 05.09.2024** தேதியன்று பிறப்பித்த உத்தரவை நடைமுறைப்படுத்த நீதிமன்ற கமிஷனாராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் மூலமாக **25, அக்டோபர் 2024 ஆம் நாளில் கையக சுவாதீனம் செய்துள்ளார்.**

கடன்தாருக்குக் குறிப்பிட்டு மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது, சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம். மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் **நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது) ரூ.19,26,591.29/–** (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபத்தாறாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று ஒன்று மற்றும் பைசா இருபத்து ஒன்பது மட்டும்) மற்றும் அதற்குரிய வட்டியுடனான தொகையுடன் தொடர்பு உடையதாகும்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் இதன்மூலம் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

சொத்தின் அட்டவணை

சொத்தின் விவரம்

Ews “A” டைப், மனை எண்.2/309, மணலி நிலை–Ii திட்டம், சடையங்குப்பம், சென்னை–600103 (தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், மணலி நிலை–Ii திட்டம்), சடையங்குப்பம் கிராமம், திருவொற்றியூர் வட்டம், சென்னை மாவட்டத்தில் அமைந்துள்ள சர்வே எண்.பகுதி இல் உள்ள 432 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள தரைத்தளம் மற்றும் குடியிருப்பு இடங்கள் உள்ள சொத்து. எல்லைகள்: **வடக்கில்:** மனை எண்கள். 284 & 285, **தெற்கில்:** 16 அடி அகல சாலை, **கிழக்கில்:** மனை எண். 308, **மேற்கில்:** மனை எண். 310, **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 12 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 12 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 36 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 36 அடி. வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் திருவொற்றியூர் சார் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

இடம்: சென்னை
தேதி: 25.10.2024

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெடிற்காக,
(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) இன் கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்-ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/ பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (டிசிஎச்எப்எல்)** வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **‘உள்ளது உள்ளவிடத்தில்’ & ‘உள்ளது உள்ளவாறு’ மேலும் ‘உள்ளது எதுவோ அது’** அடிப்படையில் 29–11–2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது **மேற்கூறிய 29–11–2024 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024 இடத்தில் 28–11–2024 அன்று மாலை 5 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி ‘உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்’ ஆனதாகும்:

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	முன்வைப்புத் தொகை	சுவாதீன வகை
1.	TCHHL0481 0001002505 66 & TC HIN0481000 100250893	திரு. சத்யகலா K & திரு. கரும்பாசலம் J	ஒப்பந்த எண். TCHIN0481000100250893 கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ. 99,529/–, மற்றும் ஒப்பந்த எண். TCHHL0481000100250566 கீழ் உள்ள நிலுவைத் தொகை ரூ.6,23,279/– ஆக மொத்தம் 10.07.2024 தேதியின் படி மொத்தம் ரூ.7,22,808/– செலுத்த வேண்டியதாகும்.	ரூ.33,19,400/– (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூறு மட்டும்)	ரூ.3,31,940/– (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பத்து ஒராயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்)	கையக

அசையா சொத்தின் விவரங்கள்: அட்டவணை A: பழைய எண்.84, புதிய எண்.96, புதுச்சேரி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சர்வே எண்.109/2 இல் உள்ள ஏக்கர் 0.64 சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலம் சர்வே எண்.109/3A1A இல் உள்ள ஏக்கர் 0.22 சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலம் சர்வே எண்.109/3A1B மற்றும் சர்வே எண்.109/3A2 இல் உள்ள ஏக்கர் 0.94 சென்ட்களில் ஏக்கர் 0.85 ¾ சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலம் சர்வே எண்.109/3B இல் உள்ள ஏக்கர் 0.28 சென்ட்கள் பரப்பளவு உள்ள நிலம் ஆகிய அனைத்தும் மொத்தம் ஏக் 1.99 ¾ சென்ட்கள் நிலம் உடைய அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் அடங்கிய சொத்து.

அட்டவணை B: (சொத்து இங்கே தெரிவிக்கப்படுகிறது) திருச்சி மாவட்டம், கரூர் பதிவு மாவட்டம், நாகவரம் சார்–பதிவு மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், பேட்டைவாய்த்தலை கிராமம், S.No.43/7, புதிய துணைப்பிரிவின் S.No.43/7A1 0.23.05 ஹெக்டேர் பரப்பளவு உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** கரும்பாசலம் பஞ்சாயத்து நடைபாதை, **தெற்கில்:** பிச்சை, செந்தில், கோகிலா வகையறாவுக்குச் சொந்தமான நிலம், **கிழக்கில்:** பஞ்சாயத்து சாலை, **மேற்கில்:** நாகம்மாள் வகையறா நிலம், **அளவீடு: கிழக்கு** மேற்காக வடக்குப் பக்கம்: 47.6 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 47.6 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 25.5 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 25.5அடி மொத்த பரப்பளவு 1214 ச.அடி.

ஏலத்தில், பொதுவாக பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப்புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். கடன்தாரர்(கள்)/உப–கடன்தாரர் (கள்) ஆகியோருக்கு இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைகளைச் செலுத்த இதன்மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவ்வாறு செலுத்த தவறினால் அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏலத்தேதிக்கு முன்பாக மேற்கூறிய நிலுவைத்தொகை, வட்டி மற்றும் செலவுகளுடன் (விற்பனை செலவு உட்பட) அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் வழங்கப்பட்டால் அல்லது இவ்வித கடனீட்டுக் கடன்தொகை, வட்டி மற்றும் செலவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்று அவருடைய திருப்திக்குரியவாறு சான்று அளிக்கப்பட்டால் மின்னணு ஏலம் நிறுத்தப்படும்.

இந்த விற்பனை தொடர்பாக ஏதேனும் பணியை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் பயனைக் கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது ஆகும்:

குறிப்பு: மின்–ஏலம் ஆனது https://www.bankauctions.com என்ற இணைய முகப்பு மூலம் 29–11–2024 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:

1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்க மாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். 2. **அசையாச் சொத்து நிர்ணய விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது.** 3. ஏலம் உயர்த்தும் தொகை ஆவது: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) 4. சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் **கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் “டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.” பெயரிலான கேட்பு வரைவோலை மூலம்** மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத்தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். 5. உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர் மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்குக் குறைவில்லாதது என்பதைப் பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறையெனத் தெளிவாகக் காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 6. பதிவுக் காரணங்களுக்காக, விற்பனை ஒத்தி வைத்தல்/ நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். 7. **முன் அனுமதியின்பேரில் 20–11–2024 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம்.** 8. வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத்தொகை உட்பட கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும்/தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். 9. மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகைச் செலுத்தப்பட்டு விட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளைத் தவிர்த்து, 15 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15வது நாளுக்குப் பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். 10. மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடாச் செய்யத் தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்திய தொகை டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மூலம் கைக்கொள்ளப்படும். மேலும் தவறும் கொள்முதலாளர் சொத்துக்குரிய அனைத்து கோரூரிமைகளையும் இழப்பார். 11. சொத்துக்கு உட்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள்: மேற்கூறிய அட்டவணைப்படி. திட்டமிடும் ஏலதாரர் சொத்து வரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள்– சேவை வழங்குநர், M/s.4Closure, பிளாக் எண்.605 A, 6 ஆவது தளம், மைத்ரிவனம் வணிக வளாகம், அமீர்பேட், ஹைதராபாத்–500038 என்ற முகவரியில் ஒருங்கிணைப்பாளர்கள் கர்நாடகா & கோவா, கைபேசி எண்.8142000809, srinivas@bankauctions.in & தெலங்கானா & ஆந்திரபிரதேசம் கைபேசி எண். 8142000064, prakash@bankauctions.in & ஒடிசா, மேற்கு வங்காளம், சத்தீஷ்கர் வடகிழக்கு மாநிலங்கள், கைபேசி எண். 8142000030, pradhan@bankauctions.in & தமிழ்நாடு & கேரளா, கைபேசி எண்.8142000735, dinesh@bankauctions.in & டெல்லி, என்சிஆர், பஞ்சாப், குஜராத், ஹரியானா & வடக்கு மாநிலங்கள், கைபேசி எண்.9515160064, prakash@bankauctions.in & மகாராஷ்டிரா, குஜராத் & மத்திய பிரதேசம், கைபேசி எண். 8142000725, Arijit@bankauctions.in மற்றும் மின்னஞ்சல்: info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி, கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண்– 9999078669–க்கு அனுப்பவும்.** 13. உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத் தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும் மேலும் சலான் நகல்பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 14. மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும் https://surl.li/mcluso 15. மேலும் https://www.tatacapital.com/property–disposal.html இணைப்பையும் காண்க.

கவனத்தில் கொள்க– டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை/ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழேக் கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம்: சென்னை
நாள்: 28.10.2024

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி,
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்